பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 12 | ஜுல்-கஜ் 18 | இதழ் 259

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 28 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1980-10-23
PERIODICALS DIVISION
LIBRARY

### பல்கலைக்கழக அனுமதி:
## றேயல்கல்லூரி மாணவன் மனு தள்ளுபடி!

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக றேயல்கல்லூரி மாணவர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு நேற்று தள்ளுபடிசெய்யப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதியில், ஐம்பத்தைந்துவீதம் மாவட்ட அடிப்படையில் என்று தெரிவுசெய்யப்படும் முறையினால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இம்முறையை ரத்துச்செய்யவேண்டும் என்றும் கோரி, றேயல் கல்லூரி மாணவன் திரு. செனிவிரத்ன உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல்செய்திருந்தார்.

மனுவை விசாரணைசெய்த

(8-ம் பக்கம் பார்க்க)

# பௌத்த மதத்துக்கு மட்டுமே
# கலாச்சார அமைச்சு உதவி!

## பாராளுமன்றத்தில் 'அமிர்' கண்டனம்

(கொழும்பு)

"கலாச்சார அமைச்சு; இந்த நாட்டின்பெரும்பான்மை மதத்தினரின் நலன்களுக்காக மட்டும்தான் செயல்படுகிறது. இந்த ஒருபிரிவு மக்களுக்காகத்தான் இயங்குகிறது. இந்த நாட்டில் பௌத்த மதத்தையும், பௌத்த கலாச்சாரத்தையும் பாதுகாப்பது- அவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதுமட்டுமேகலாச்சார அமைச்சின் முக்கிய நோக்கமாகும். இதன் அடிப்படையில் தான் இந்த அமைச்சு இயங்குகிறது" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட கலாச்சார நிதியம் திருத்தச்சட்ட மூலத்தின்மீது பேசுகையில்தான் திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது;

### கிழக்கு மாகாண கோவில்கள்

கிழக்கு மாகாணத்தில் வீசிய சூறாவழியினால் பாதிசகப்பட்ட இந்துக் கோவில்கள், பகுதிகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் சம்பந்தமாக 32 கோவில்களை ஜனாதிபதி நிதியிலிருந்து திருத்துவது குறித்து விபரங்களடங்கிய ஒரு பட்டியலை கலாச்சார அமைச்சிடம் சமர்ப்பித்து 5 மாதங்களாகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பௌத்த ஆலயங்களை மட்டும்தான் திருத்தவேண்டும்-புனரமைக்க வேண்டும் என்று கலாச்சார அமைச்சு கருதுகின்றதா?

'பிரதமர் எங்கு சென்றாலும் ஐக்கியம் பற்றிப்பேசுகின்றார். இப்படியான நடவடிக்கைகள்மூலம் ஏனைய மதத்தினருக்கு ஏற்படக்கூடிய மனத்தாக்கலை நீக்க பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### புனிதப் பிரதேசக் கோரிக்கை

'கோணேஸ்வரர் ஆலயத்தையும், மடு, திருக்கேதீஸ்வரத்தையும் புனிதபிரதேசமாகப்பிரகடனப்படுத்துமாறுஅரசாங்கத்தைக் கேட்டிருந்தோம். ஆனால் அரசு இதனைப் பொருட்படுத்தவில்லை. கலாச்சார அமைச்சும் இதற்குக் காதுகொடுக்கவில்லை இந்த நாட்டில் பௌத்தர்கள்தாம் பான்மையாக இருக்கின்றார்கள் என்பதனால்தான் இப்படி

(8-ம் பக்கம் பார்க்க)

### திருமலை, வவனியா எம்.பிக்கள் அச்சம்

(கொழும்பு

கலாச்சார நிதியம் திருத்தச் சட்ட மூலத்தின் மீது நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய திருகோணமலை, வவனியா எம். பிக்கள். இரண்டு மாவட்டங்களிலும் நடைபெறும் புதைபொருள் ஆராய்ச்சி குறித்து அச்சம் தெரிவித்தனர்.

வவனியாவிலும், திருகோணமலையிலும் புதைபொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் நடைபெறும் ஆராய்ச்சிகள் மூலம் இந்துவழிபாட்டுத் தலங்கள், பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன என்றும், இதன்மூலம் இந்துக்கள் பெரும்பீதி கொண்டுள்ளனர் என்றும் வவனியா எம். பி திரு தா. சிவசிதம்பரமும், திருமலை எம். பி- திரு. ஆர் சம்பந்தரும் அச்சம்தெரிவித்துள்ளனர். (ம)

### பத்திரகாளி அம்மன் ஆலய தீவிபத்து
### ஜனாதிபதி ரூபா 3 லட்சம் உதவி

(கொழும்பு)

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளிஅம்மன் ஆலயத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் எரிந்து சாம்பலான இரதங்களுக்குப் பதிலாக புதிய தேர்களையும் வாகனங்களையும் நிர்மாணிக்கும் பொருட்டு மூன்று லட்சம் ரூபா நிதி உதவியளிக்க ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இணக்கம் தெரிவித்துள்ளார்.

இரதங்களையும் வாகனங்களையும் புதிதாக நிர்மாணிக்க ஆறுலட்சம் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டது. (ம)

## "தமிழர் – சிங்களவர் பேதம் அரசாங்கங்களினால்தான் தூண்டப்படுகிறது!"
### பண்டித குணரத்தினதேரோ கருத்து

(யாழ்ப்பாணம்)

'இந்த நாட்டில் தமிழரும் சிங்களவரும் சகோதரர்களாக வாழ்ந்துவந்திருக்கின்றனர்; தமிழர்களை நாங்கள் சகோதரர்களாகவே மதித்துப் பழகுகின்றோம். தமிழர்—சிங்களவர் பேதம் அரசாங்கங்களினால்தான் தூண்டப்படுகிறது.'

இவ்வாறு நேற்று முன்தினம் வீரமாகாளி அம்மன்கோயிலுக்கு முன்பாக நடைபெற்ற உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மாலையில் யாழ் ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அனுராதபுரத்தைச் சேர்ந்த பண்டித ரந்தொம்பை குணரத்னதேரோ பேசுகையில் கூறினர். இக்கூட்டத்துக்கு திரு. கந்தசாமி தலைமை வகித்தார். பண்டித குணரத்னதேரோ தொடர்ந்து பேசுகையில்;

''மக்கள்துன்பப்படும்போது மதத் தலைவர்கள் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது வேலை இழந்தவர்களுக்கு உதவப்போய் நான் பனன்கு தினங்கள் விளக்கமறியலில் இருந்தேன். திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை [illegible] புகுத்தியதனால் தமிழர் பலர் மாண்டனர். [illegible] மீக ஆட்சியிலும் தமிழர்-சிங்களவர் குழப்பம் நடைபெறுகிறது. பௌத்த ஆகமம் சாதிபேதத்தைக் கூறவில்லை. எல்லோரும் சமமே'' என்றும் கூறினர்.

# கேகாலை தமிழ்ப் பாடசாலை
## அதிபர்களாக தமிழர் நியமிக்கப்படுவர்
### இ. த. ஆ. ச. கோரிக்கையை பணிப்பாளர் ஏற்ருர்

(யாழ்ப்பாணம்)

கேகாலை மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தமிழரையே அதிபராக நியமிக்க ஆவன செய்வதாக கேகாலை கல்வி பணிப்பாளர் ஜனபா கமால்டீன் உறுதியளித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்திலுள்ள ஏழு தமிழ் பாடசாலைகள் முஸ்லீம் அதிபர்களால் நியமிக்கப்படுவதை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக ஆட்சேபித்து கேகாலைக் கல்விப் பணிப்பாளருக்கும், கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கும் மகஜர் அனுப்பி சில மாதகாலம் கடந்தும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததால் கடந்தவாரம் திரு. த. மகாசிவம் தலைமையில் ஒரு தூதுக்குழு கேகாலை கல்விப் பணிப்பாளர் ஜனபா கமால்டீன் சந்தித்து கலந்துரையாடியது. இச்சந்திப்பில் சங்க கேகாலைமாவட்டச் செயலாளர் திரு. ரி. நமநாதனும் பிரசன்னமாக இருந்தார்.

இக்கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்ட பணிப்பாளர் மூன்றும் தவணையும் இறுதிக் கட்டத்தை டைகின்றபடியால் உடனடியாக மாற்றம்செய்து பாடசாலைகளின் வழமையான வேலைகலைக் குழப்பம் செய்யாது வருட இறுதியில் இவ்வேழு பாடசாலைகளுக்கும் தாம் தமிழரையே அதிபராக நியமிக்க ஆவன செய்வதாகவும்உறுதியளித்தாராம். ( )

## கிளர்ச்சியில் குதிக்கமுடிவு

சென்னை, அக். 27

கிளர்ச்சியில் இறங்கமுடிவு செய்துள்ள திரு. நாராயணசாமி நாயுடு தலைமையிலான தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்திற்கு, மாநில மின்சாரத் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் இன்று கடு எச்சரிக்கை விடுத்தார்.

த. வி. சங்கத்தினர் நேற்று திருச்சியில் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியதாக நிருபர்களிடம் திரு. எஸ். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இத் தீர்மானங்களின்படி விவசாயிகள் சங்கத்தினர் தமிழ்நாட்டில் உணவு நெருக்கடியை ஏற்படுத்த முடியுமென தாம் நம்புவதாகக் கூறிய அவர் இத்தகையவர்களுக்கெதிராக தமிழ்நாடு அரசு கடும்நட

(8-ம் பக்கம் பார்க்க)

## வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு இன்று சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

இன்று காலை பத்து மணிக்கு பாராளுமன்றம் கூடும்போது 1981ம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளை நிதிஅமைச்சர் திரு. ரொனி டி. மெல் சமர்ப்பிப்பார்.

வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் (பட்ஜட்) கண்டுவிழும் தொகையை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதுபற்றியும் [illegible] சபையில் தெரிவிப்பார். (ம)

## சுகாதாரவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார விழாவின் இரண்டாம்நாளான இன்றைய நிகழ்ச்சி விபரம் வருமாறு:-

காலை 7 மணிக்கு 2, 3, 5ம் வட்டாரங்கள் சுத்திகரிப்பு.

காபண்டபத்தில் பாடசாலை களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி, சனசமூக நிலையங்களுக்கிடையிலான வில்லிசைப் போட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

காவலாளர் தேவை (Guard) நேரில் வரவும். லங்கா பாதுகாப்புத் திட்டம், 11A, மேல்மாடி, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
7191

அலுமினிய தொழிற்சாலைக்கு நல்ல அனுபவமுள்ள ஸ்பின்னர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். செல்சன்ஸ் மெட்டல் இன்டஸ்ரீஸ், 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
7193

MOOLAI CO-OPERATIVE HOSPITAL S CIETY LTD.
WANTED
R. M. P. or Pharmacist or Apothecary.
Appointment:- Contractual.
Salary and Age:- Negotiable.
Apply on or before 15th November with Bio data.
President.
7192


# "பாலர் பள்ளிகள் கிராமத்துக்கு அவசியம்"

(மன்னார்)

கிராமப் புறங்களில் வாழும் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாலர் பாடசாலைகள் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று இலங்கைக் கூட்டு பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தின் ஆதரவில் புதுக்கமம் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள பாலர் பாடசாலையைத் திறந்து வைத்தபின் நடைபெற்ற கூட்டத்தில் மன்னார்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கூறினார்.

திரு. டேவிட் சிமியோன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிராந்திய முகாமையாளர் திரு. சலா[illegible] மேஸ்வரன், மாவட்டச்செயற் குழுத்தலைவர் கலாநிதி ரூபேட் குரூஸ், மாவட்டச் செயலாளர் ஜனுப் என். எஸ் எம். கவுது உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# 'சொந்தமுயற்சியில்படிக்கும் பிள்ளைகளே சித்தியடைகின்றனர்''

(அரியாலை)

''ரியூட்டறிகளில் கல்விகற்று பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களில் அநேகர் அங்கு நடைபெறும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறுகிறார்கள். ஆனால் கிராமங்களிலிருந்து தமது சொந்த முயற்சியின் மூலம் கல்விகற்றுப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்கள் திறமைச் சித்திகளைப் பெறுகிறார்கள். மாணவர்கள் தாமாகவே முயற்சிசெய்து கற்றுக்கொண்டால் பரீட்சைகளில் சித்தி பெறத் தவறமாட்டார்கள்''

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா, பரி யோவான் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் பெற்றோர் தின விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதுடன், அவர்களின் முயற்சிகளைப் பாராட்டி வளர்க்கவேண்டியது பெற்றோரின் கடமையாகும். பெற்றோர் தமது அன்பைப் பிள்ளைகளின் மேல் வெளிப்படையாகக் காட்டவேண்டும். பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே அந்நியோன்யம் இருக்கவேண்டும். பிள்ளைகள் தமது வேலைகளை ஒழுங்காகச் செய்ய பெற்றோர் வழிநடத்த வேண்டும். தாங்களாகவே தமது பாடங்களை விருப்புடன் கற்க வழிநடத்தவேண்டும். பிள்ளைகளின் மூளை விருத்தியடைய அவர்களுக்கு நல்ல போஷாக்குள்ள உணவு அவசியமாகும். இவ்விஷயத்திலும் பெற்றோர் பூரணகவனஞ் செலுத்தவேண்டும். மாணவர்களின் நல்வாழ்வுக்குவேண்டிய போதனைகளைப் பெற்றோர் தமக்கு நேரங்கிடைக்கும் நேரங்களில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். ரியூற்றரிகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் ரியூற்றரிகளில் பாடங்கள் முடிவடைந்த பின்னர் என்ன செய்கிறார்கள் என்பதை அறியமுற்படுகிறார்களில்லை. பிள்ளைகளின் முன்னேற்றம் ஆசிரியர்களில் மட்டுமல்ல பெற்றோரிலும் தங்கியிருக்கிறது''

ஆரம்பபாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. வி. துரைச்சாமி பாடசாலையின்வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். இறுதியில் மாணவர்களின் இயல், இசை, நாடகங்கள் நடைபெற்றன. (அ)

# கட்டுடை
# வீடமைப்புத்திட்டத்தில் மரம்நாட்டுவிழா

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தேர்தல்தொகுதியிலுள்ள கட்டுடை வீடமைப்புத்திட்டத்தில் மரம் நாட்டு விழா இம்மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளது.

வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இம்மரம் நாட்டு வைபவத்தில் பிரதம அதிதியாக மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கலந்துகொள்வார்.

தொழில் அதிபர் திரு. க. கனகராசா, யாழ். கமநலச் சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம், மானிப்பாய் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுமாரன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள். (க)

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து அப்துல் ரஸாக் முகம்மது (வயது 22) என்ற சிறைக்கைதி நேற்று முன்தினம் தப்பி ஓடிவிட்டார் எனப் பொலிசார் தெரிவித்தனர். (இ)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

### சந்தைகள், இறைச்சிக் கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள்

## குத்தகை 1981

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், கடைகள், நிலையங்கள் ஆகியவற்றின் 1981-ம் ஆண்டிற்கான குத்தகைக் கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 13-11-1980-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள், அவற்றிற்குரிய பிணைப்பணமும், கேள்விப் பத்திரக் கட்டணமும் செலுத்தியதன் பேரில் 12-11-1980 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை மாநகரசபை அலுவலகத்தில் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களில் இணைப்பிரதிகளாக தயாரிக்கப்பட்டு, அரக்குமுத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக மாநகராட்சி மன்ற ஆணையாளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும். குத்தகையின் விபரம் கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 24-10-1980.

### அட்டவணை

| | குத்தகை விபரம் | 1980ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை | கேள்விப்பத்திரக் கட்டணம் | கேள்விப்பிணை |
|---|---|---|---|---|
| 01. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 99101-00 | 25-00 | 500-00 |
| 02. | முற்றவெளிச் சந்தை | 50478-12 | 2[illegible]-00 | 500-00 |
| 03. | செங்குந்தா சந்தை | 71251-11 | [illegible]5-00 | 500-00 |
| 04. | அரியாலை புதிய சந்தை | 6225-00 | 25-[illegible]0 | 100-00 |
| 05. | கொழும்புத்துறைச் சந்தை | 1031-00 | 25-00 | 100-00 |
| 06. | நாவாந்துறைச் சந்தை | 23750-00 | 25-00 | 100-00 |
| 07. | பாஷையூர் சந்தை | 9119-19 | 2[illegible]-00 | 100-00 |
| 08. | பண்ணை மீன்சந்தை | 18137-51 | 25-00 | 100-00 |
| 09. | பண்ணை மீன்சந்தை வளவிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 919-00 | 2[illegible]-[illegible]0 | 100-00 |
| 10. | சின்னக்கடைச் சந்தை வளவிலுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | —— | 25-00 | 100-00 |
| 11. | நவீன சந்தை வளவிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 18855-10 | 25-00 | 100-00 |
| 12. | பொதுசன நூலக வளவிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 4012-00 | 25-00 | 100-00 |
| 13. | பாஷையூர் சந்தையிலுள்ள 1-ம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 2011-25 | 25-00 | 100-00 |
| 14. | பாஷையூர் சந்தையிலுள்ள 4-ம் இலக்கக் கடை அறை | 600-00 | 25-00 | 100-00 |
| 15. | அரியாலை புதிய சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1111-11 | 25-00 | 100-00 |
| 16. | நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 6117-64 | 25-00 | 100-00 |
| 17. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள கடை அறை | 1519-00 | 25-00 | 100-00 |
| 18. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள ஆட்டிறைச்சிக் கடை இல. 01 | 576-09 | 25-00 | 100-00 |
| 19. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல. 02 | 1201-00 | 25-00 | 100-00 |
| 20. | சின்னக்கடை சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக்கடை இல. 03 | 2346-00 | 25-00 | 100-00 |
| 21. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல 04 | 1180-44 | 25-00 | 100-00 |
| 22. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக்கடை இல 5 | 1165-00 | 25-00 | 100-00 |
| 23. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல. 6 | 1211-01 | 25-00 | 100-00 |
| 24. | சின்னக்கடைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக்கடை. இல. 07 | 1001-00 | 25-00 | 100-00 |

குறிப்பு:
மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.
7189


# புதிய சமாதான நீதவான்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த டாக்டர் ரி. கோபாலசிங்கம் சமாதான நீதவானாகமல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. ஆர். இராசசிங்கம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாட்டிலுள்ள [illegible] அரசினர் வைத்தியசாலைகளில் கடந்த 32 ஆண்டுகளாக பதிவு பெற்ற வைத்திய அதிகாரியாக கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற டாக்டர் கோபாலசிங்கம் பதிவுபெற்ற வைத்திய உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தில் பல முக்கிய பதவிகளை வகித்து ஓய்வுபெறும் போது அதன் போஷகராகவும் விளங்கினார்.

குருநாகல் கிறிஸ்த் சேர்ச் கல்லூரி யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் சங்கானை பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுச் சங்கம் சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டி கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றில் முக்கிய பதவிகளை வகித்து வரும் டாக்டர் கோபாலசிங்கம் ஒரு சனசமய சேவையாளராவர். (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### • கொரம்ஷர் நகரைச்சுற்றி தீவிர யுத்தம்

# ஈரானிய படைகளிடம் போதிய ஆயுதங்கள், பீரங்கிகள் இல்லாத நிலையிலும் கடும்சண்டை

## தெஹ்ரான் வானொலி திடீர் அறிவிப்பு

தெஹ்ரான், அக்.27

ஈரானின் கொரம்ஷர் நகரைச் சுற்றி வளைத்துள்ள ஈராக் படைகளை விரட்டியடிப்பதற்காக கடும் சண்டையில் ஈடுபட்டு வரும் ஈரானிய படைகளிடம் போதிய ஆயுதங்களும் பீரங்கிகளும் இல்லாதிருக்கின்றன என்றும் இந்நிலையிலும் ஈரானியப் படைகள் ஈராக்படைகளை பல மைல் தூரம் விரட்டி அடித்துவிட்டன என்றும் தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

### எதிர்தாக்குதல் முறியடிப்பு

இதே வேளையில் ஹொரம்ஷர் நகரைச் சூழ்ந்துள்ள ஈராக் படைகள் மீது ஈராக் பக்தாத் இராணுவ ... ஈரானிய படைகள் நடத்திவந்த எதிர்த்தாக்குதலைத் ... படைகள் முறியடித்து விட்டு வேகமாக முன்னேறி வருவதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கின் றது.

### இரண்டுரோந்துப்படகுகள் மூழ்கடிப்பு

ஷட்-அல்-அரப் நீரிணையில் ரோந்து சுற்றி வந்த ஈரானிய பீரங்கிப்படகுகள் இரண்டை ஈராக் படைகள் மூழ்கடித்து விட்டதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

### பாணி சதர் பார்த்தார்

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் ஈராக் படைகளின் ஏவுகணைத் தாக்குதலினால் சேதமடைந்த டெஸ்புல் நகர் குடியிருப்புப் பகுதிகளை ஈரானிய ஜனாதிபதி ஜனப் பானிசதர் நேரில் பார்வையிட்டதுடன் காயமடைந்தவர்களுக்கும் ஆறுதல் கூறினர்.

இந்த ஏவுகணைகளைத்தாக்குதலின்போது 75பேர் பலியானதும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததும் தெரிந்ததே. (இ)

### எண்ணெ உற்பத்தி அதிகரிப்பு

அபுதாபி, அக் 27

சர்வதேச சந்தையில் ஈரான் ஈராக் எண்ணெ விநியோகம் நிறுத்தப்பட்டதை அடுத்து எண்ணெ உற்பத்தியை ரு சத விகிதத்தால் அதிகரிப்பதென்று ஐக்கிய அரபு எமிரேட்டுகள் தீர்மானித்துள்ளது. (இ)

### வீடு டைத்து திருட்டு

(பண்டத்தரிப்பு)

மாதகல் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இராசசூரியர் என்பவரின் வீட்டில் இரவு வேளையில் ஜன்னலைப் பிரித்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்து 1,500 ரூபா பெறுமதியான புடவைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுப்பற்றி சங்கானை பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டதை அடுத்து பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடாத்தினர். (க)

## இந்தியாவில் அதிபர்ஆட்சி; வழக்கறிஞர்கள் ஆதரவு

புதுடில்லி, அக். 27

இந்தியாவில் ஜனாதிபதி ஆட்சி முறையை அமுல்படுத்தும் வகையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதென்ற இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் யோசனைக்கு இந்திய வழக்கறிஞர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் நேற்று முடிவடைந்த அகிலஇந்திய வழக்கறிஞர்களின் 2 நாள் மகாநாட்டிலேயே வழக்கறிஞர்கள் அதிபர் ஆட்சி முறைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அதிபர் ஆட்சி முறைக்கு மகாநாட்டில் கலந்துகொண்ட வழக்கறிஞர்கள் ஏகமனதான ஆதரவைத் தெரிவிக்காதபோதிலும் அநேகர் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

### ஈரானின் நியாயமான உரிமைகளை

# அமெரிக்கா அங்கீகரித்தால் பணயக்கைதிகள் விடுதலை

## ஈரான் சபாநாயகர் அறிவிப்பு

தெஹ்ரான், அக். 27

ஈரான் மாணவர்கள் வசமிருக்கும் அமெரிக்க பணயக் கைதிகளின் எதிர்காலம் அமெரிக்காவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஈரானின் நியாயமான உரிமைகளை அமெரிக்கா அங்கீகரித்து அதன் நியாயமான கோரிக்கைகளை மதித்து நடந்தால் பணயக்கைதிகளை விடுதலை செய்வது சாத்தியமாகும்.

இவ்வாறு ஈரான் சபாநாயகர் தெரிவித்தார்.

ஈரானிய சமயத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியைச்சந்தித்து பேச்சுநடத்திய பின்னர் நிருபர்களிடம் பேசுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு கூறினர்.

இதேவேளையில் பணயக் கைதிகளின் எதிர்காலம்பற்றி முடிவு செய்யும் பொருட்டு ஈரான் பாராளுமன்றம் இன்றும் மீண்டும் இரகசியமாகக் கூடியது. (இ)

# பணயக்கைதிகள் விரைவில் விடுதலை

## வால்ட்ஹெய்ம் நம்பிக்கை

நியுயோர்க், அக். 27

அமெரிக்கப் பணயக் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் எனத் தாம் நம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தாம் ஈரானிய பிரதமர் ஜனப் அலீ ரஜாயுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே தமக்கு இந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் வால்ட் ஹெய்ம் நியுயோர்க்கில் நேற்றுத் தெரிவித்தார்.

### அமெரிக்கா நம்பவில்லை

பணயக் கைதிகள் விடுதலை குறித்து அமெரிக்கா எதுவித வீண் நம்பிக்கையையும் கொள்ளவில்லை என்று அமெரிக்கத் துணை அதிபர் தெரிவித்துள்ளார். (இ)

## தமிழக கவர்னர் பட்வாரி உடனடியாக பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்

### புதியகவர்னர் சாதிக்அலி

சென்னை, அக். 27

தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரி திடீரென பதவியிலிருந்து மத்திய அரசினால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

புதுடில்லி ஜனாதிபதி மாளிகையிலிருந்து நேற்று இத்திடீர் அறிவித்தல்வெளியிடப்பட்டுள்ளது.

திரு. பட்வாரியின் இடத்திற்கு மகாராஷ்டிர கவர்னர் ஜனப் சாதிக் அலி நியமிக்கப்பட்டுள்ளார். மகாராஷ்டிர மாநில கவர்னராக முன்னாள் இந்திய விமானப் படைத் தலைவர் ஏயர் பீல்ட் மார்ஷல் ஏ. பி. மெஹ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பட்வாரி உடனடியாக பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதை அடுத்து அவருடைய இடத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். எம். இஸ்மயில் தமிழ்நாட்டின் தற்காலிக கவர்னராக நேற்று பதவியேற்ருர். இப்பதவியேற்பு வைபவத்தின்போது தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உட்பட சகல அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (இ)

### தமிழ்நாட்டில் 14 நக்ஸலைட்டுகள் கைது!

சென்னை, அக். 27

தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் 14 நக்ஷலைட்டுகளைப் பொலிசார் கைது செய்துள்ளார்.

இவர்களிடம் நக்ஸலைட் துண்டுப்பிரசுரங்கள், வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்று கைக்குண்டுகள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்று பொலிசார் தெரிவித்தனர். (இ)

### வெளிநாடு செல்லும் இந்திய கிரிக்கட் குழு

புதுடில்லி, அக். 27

இவ்வாண்டு இறுதியில் நியூஸிலாந்துக்கும் ஆஸ்ரேலியாவுக்கும் விஜயம் செய்யும் இந்திய கிரிக்கட் குழுவில் தமிழ் நாட்டைச்சேர்ந்த சிறிநிவாசம், புதுடில்லியைச் சேர்ந்த ஆஸாத் ஆகியோர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கட் குழு வீரர்கள் வருமாறு:-

சுனில் கவாஸ்கர் (தலைவர்) குண்டப்பா விஸ்வநாத், சேக்கன் சௌஹான், டிலிப் வெங்கசாகர், யஷ்பால் சர்மா, சந்திப் பட்டேல், கபில் தேவ், ஹர்ஷன் கவ்ரி, சையத் கிர்மாணி, பாரத் ரெட்டி, லிப் ஜோஷி, ரொஜர் பின்னி ஷிவ்யால் யாதவ், (இ)

### ஈரான் ஈராக்

# யுத்தத்தை அமெரிக்கா தனது சொந்தநலனுக்கு பயன்படுத்துகிறது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கண்டனம்

விஜயவாடா, அக். 27

ஈராக்-ஈரான் யுத்தத்தை அமெரிக்கா தனது சொந்த நலனுக்காகப் பயன்படுத்துகிறது.

அத்துடன் இந்துசமுத்திரப் பிரதேசத்திலும் பாரசீக வளைகுடாப் குதியிலும் அமெரிக்க கடற்படை அணிகளைத் திரட்டிவைத்திருக்கிறது.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் தேசியசபை குற்றம் சாட்டியுள்ளது.

விஜயவாடாவில் நடை... ...லேயே மேற்கண்ட ... ம் தெரிவிக்கப்பட்டது.

உலகில் இராணுவ பூசல்களைத் தூண்டுவதிலும் ஆயுதப்போட்டிகளை ஊக்குவிப்பதிலும் முற்போக்கு அரசுகளைக் கவிழ்ப்பதிலும் ஏகாதிபத்திய நாடுகளும்சீனவும்ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனவென்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய சபை குற்றம் சுமத்தியது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கடவுளுக்காகத் தாகமுற்றிருப்பவனுக்கு அன்னம், பானம் போன்ற அற்ப விஷயங்களிலே எண்ணத்தைச் செலுத்துவது முடியாது போகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# "அமரர் யோசவ் மக்களுக்கு சிறந்தசேவையாற்றினர்"

## நினைவுதினக்கூட்டத்தில் யாழ். எம். பி.

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்தில் அரசாங்க அதிபர்பதவி காலியாக இருந்தபோது அப்பதவிக்கு அப்போது மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. யோசப் அவர்களையே நியமிக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் விரும்பினர். அதனால் நாம் ஜனாதிபதியை நேரில் சந்தித்து அவரை நியமிக்குமாறு கூறினேம்.''

முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் அமரர் அன்ரன் அல்பிரட் யோசப்பின் நினைவு தினக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் மேறகண்டவாறு கூறினர்.

நினைவு தினக்கூட்டம் யாழ். அடைக்கல மாதா ஆலயத்தில் வைத்திய கலாநிதி திரு. சிவஞானரட்னம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திராதுரைசுவாமி அமரர் யோசப்பின் நினைவுநூலை வெளியிட்டுவைத்தார்.

யாழ், எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; ''அமரர் யோசப் உயிருடன் இருந்த காலத்தில் சிறந்த சேவையை மக்களுக்கு ஆற்றினர். அதனல்த்தான் நானும் எமது தலைவர்களான நல்லூர் எம், பி. திரு. சிவசிதம்பரம்' காங்கேசன்துறை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் அமரரை யாழ். அரசாங்க அதிபராக நியமிக்க வேண்டுமென விரும்பினேம். எமது கட்சிப் பாராளுமன்றக்குழு கூடியதும் அமரரையே அரசாங்க அதிபராக நியமிக்க வேண்டுமென்று முடிவெடுத்தோம், வேறு எந்த விடயத்திற்குமே நாம இவ்வளவு கெதியில முடிவெடுததது கிடையாது.

''ஆஸ்பத்திரிக் குழுவிற்கு தலைவராக இருந்த காலததில் சிறப்பாகக் கடமையாற்றினர்.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திராதுரைசுவாமி பேசுகையில் கூறியதாவது: ஒரு பெரிய மனிதன் அவர்! எனது ஒரு நெருங்கிய நண்பர். அவருடன் வைத்திய சாலைக்குழுவில் நான் கடமையாற்றியபோது அவருடைய நிர்வாகத் திறமையை அப்போது நான் அறிந்து கொண்டேன. அவர் யாழ். அரசாங்க அதிபராகவும் மாநகரசபை விசேட ஆணையாளராகவும் கடமையாற்றிய காலத்தில் அவருடைய நிர்வாக திறமையை, சேவை மனப்பான்மையை, கடமையுணாச்சியை பலர் பாராட்ட நான் கேள்விப்பட்டிருக்கிறேன்,' என்ருர்.

மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் பேசுகையில் திரு யோசவ் அமைதியான முறையில் மக்களுக்கு பல சேவைகளை ஆற்றியுள்ளார். மாநகரசபை விசேட ஆணையாளராக அவர் பணியாற்றிய காலத்தில் எனக்கு அவருடன் நெருங்கிப் பழகு வாய்ப்பு உண்டானது. அவருடன் பழகிய காலத்தில் கசப்பான அனுபவம் எதுவும் நிகழ்ந்ததில்லை'' என்ருர்.

சமூக சேவைப்பகுதி அத்தியட்சகர் திரு கே. செங்காதரன், சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சார்பில் டாக்டர்ஜே.பி.சி. பிலிப், உட்பட பலர்உரையாற்றினர்கள்.

(கொ-கு)

# நமது நோக்கு

## அமெரிக்காவின் நாற்பதாவது ஜனதிபதி

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் அமெரிக்க ஜனதிபதி தேர்தல் உலக நிகழ்ச்சிகளில் முதன்மைபெற்ற தொன்ருகும். இன்னும் ஒருவாரத்திற்குள் அமெரிக்காவின் நாற்பதாவது ஜனதிபதி யார் என்பதை உலகு அறியும்.

உலகிலே செல்வத்திலும், ராணுவபலத்திலும் முதலிடம் வகிக்கும் அமெரிக்கா சர்வதேச விவகாரங்களில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருப்பது அதிசயமல்ல. ஆயினும் இன்று பொருளாதாரத்திலும், உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்னைகளிலும் பல தோல்விகளைக் கண்டிருக்கிற அமெரிக்க மக்கள் நவம்பர் 4ம் தேதி எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது நாளுக்குநாள் மாற்றமடையும் சோதிடமாகும்.

சுமார் ஐம்பது பிரதேசங்களில் அமெரிக்க மக்கள் 538 வாக்காளப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வார்கள். இம் மொத்தத்தில் 270 வாக்குகள் பெறும் வேட்பாளர் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

இத்தேர்தலில் போட்டியிடுபவர் மூவர். இன்று ஆட்சிநடத்தும் ஜனநாயகக் கட்சியின் காட்டர், குடியரசுக்கட்சி வேட்பாளர் முன்னநாள் கலிபோர்னிய கவர்னர் றெனல்ட் றீகன், சுயேச்சையாகிய திரு. ஜோன். அன்டர்சன். ஒரு தடவை ஜனதிபதி பதவியிலிருந்தவர் மறுமுறையும் தேர்தலில் குதித்தால், அவருடைய ஆட்சி படுமோசமாயிருந்தாலொழிய, அமெரிக்கமக்கள் அவரை மறுமுறையும் ஆதரிப்பது வழக்கமானது.

இன்றைய உலக சூழ்நிலையிலும், அமெரிக்க உள்நாட்டு நடவடிக்கைகளிலும், ஜனதிபதி காட்டர் தொடர்ந்தும் நாலுவருடங்கள் வெள்ளை மாளிகையில் அமர்ந்திருப்பார் என்று சத்தியஞ் செய்வதற்கில்லை.

அமெரிக்க பொதுத்தேர்தற் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போல் விடாது காய்ந்து கொண்டிருக்கிறது. மருத்துவ உலகில் இவ்வருத்தத்தை முறியடிக்க நல்ல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் உலகில் இதுநாளாந்தம் ஏமாற்றங் கொடுக்கும் வியாதியாக விருக்கிறது.

என்னதானிருந்தாலும் தெரிந்த பிசாசு - தெரியாத தொன்றிலும் பார்க்க நல்லது' என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. இதனைப ரஷ்யத் தலைவர்கள் இத்தேர்தலில் தங்கள் பொது அபிப்பிராயமாகக் கொண்டிருக்கின்றனர்.

உலகதிலே சிக்கலாக விருக்கும் போதிலும், நேர்எதிரிகளான முதலாளித்துவ, ஏகாதிபத்திய அமெரிக்காவும், ராணுவபலம் மிக்க கம்யூனிஸ்ட் ரஷ்யாவும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டால், உலக சமாதானத்துக்கு நிரந்தர நம்பிக்கையுண்டு. இந்த அடிப்படையில் அமெரிகக ஜனதிபதி காட்டர் ரஷ்யாவின் வெறுப்புக் குரியவரல்லர்.

தம்முடைய சொந்தத் தேசத்தில் அவருக்கு ஆதியிலிருந்த ஆதரவு வரவரக் குறைந்து வந்தது. அதற்கு பல தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்த போதும், காட்டரின் திறமையை அதிகம் மெச்சியிருந்த மக்கள் தோல்விகளைக் கண்டு ஏமாற்றமடைந்ததே முக்கியமானது.

ஆப்கான் நெருக்கடி, கம்பூச்சியாவில் காரிய சித்தியின்மை, ஈரானில் நடைபெற்றஇஸ்லாமியப் புரட்சியும், பணயக் கைதிகளின் ஒருவருடச் சிறையும், பாரசீகக் குடாவில் நடைபெறும் யுத்தம், உள்நாட்டில் பணவீக்கம், வேலையின்மை, மக்கள்வெறுப்பை வளர்க்கும் பணநெருக்கடியும், பொருளாதாரக் கொள்கை-இவையும் காட்டரின் கடந்த ஆட்சியின் செலவிலே எழுதப்படுவன.

நல்ல மனிதர் காட்டர், விருத்தியடையும் உலகின் வளைவு நெளிவுகளுக்கு ஈடுகொடுக்கவல்ல இராஜ தந்திரம் குறைந்தவர் என்பதே இன்றைய பிரசாரம். அவருடன் போட்டிபோடும் திரு. றீகன் எவ்வித தோல்விகளிலும் சிக்காதவர். காரணம் எவ்வித உலக விவகாரங்களிலும் ஈடுபடாதவர் தான் ஆட்சிக்கு வந்தால் ராணுவபலத்தை பன்மடங்கு அதிகரிப்பித்துரஷ்யா போன்ற எதிரிகளை அடக்கி வைப்பதாகப் பிரசாரம் செய்து வருகிருர்.

இப்பெரிய சரித்திரப் பிரசித்தி பெற்ற பொதுத்தேர்தலில், ஒருவருக்கொருவர் ஏசிப்பேசி, இழிவு படுத்தும் பிரசாரம், இவர்கள் எங்களுக்கும் சொந்தமானவர்கள் என்று நினைக்க நேரிடும். ''றீகன் நாட்டின் ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும் சிலநிமிடங்களில் பசியாறிவிடுவார்'' என்கிருர் காட்டர். ''உலகின் மிகப் புகழ் வாய்ந்த ஜனநாயகத்தை ரஷ்யாவுக்கு அடகுவைத்ததுடன் அரபுநாடுகளுக்கும் ஈரானுக்கும் பயந்து, பணயக் கைதிகளை விடுவிக்க இயலாத பேர்வழி'' என்ருர் றீகன். மூன்ருவது சுயேச்சையான ஜோன் அன்டர்சன் கடைசியிலே தள்ளாடுகிருர். அவருக்குக்கிடைக்கும்ஒவ்வொருவாக்கும் காட்டருக்கெதிரானதென்றே கொள்ளவேண்டும்.

தொடக்கத்தில் காட்டர் சார்பில் இருந்த ஆதரவு படிப்படியாக றீகன் பக்கம் சாய்ந்தது. ஜனதிபதியைக் களைக்கப்பிடித்தது. மறுபடியும் அவருடைய நன்மைகளை- குறிப்பாக அரபு-இஸ்ரேல் உறவு, சீனு ... பான்ற செயல்களை ... கூருகின்றனர்.

''இருந்தவர் இன்னெருமுறை இருந்து விட்டுப் போகட்டும்'' என்ற முடிவுக்கு வரக்கூடிய பெரு உணர்வு உள்ள மக்கள் அமெரிக்க மக்கள்,

# மக்கள் கருத்து

## விவசாயிகளின் கஷ்டம்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாழும்விவசாயிகள் இம்முறை காலபோகத்திற்காக பயிரிடுவதற்கு விதைநெல் இன்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர். அண்மையில் நெல்லின்விலை உயர்ந்து சென்றதையடுத்து இப்பகுதியிலிருந்து ஏராளமான நெல்லை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்றதனுலேயே இந்நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் விவசாயக் கந்தோர் மூலம் ஓரளவு விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்கிவருவது மிகவும்பாராட்டத்தக்கது. எனினும் எல்லா விவசாயிகளுக்கும் அவர்கள் பயிரிடுவதற்கு ஏற்ற நிலங்களுக்குரியவிதைநெல்கிடைப்பதில்லை. பெருந்தொகையான விவசாயிகள் மேட்டு நிலங்களில் பயிரிடுவதற்கு வரட்சியைத் தாங்கக்கூடிய சில இன விதைநெல்லையே விரும்புகின்றனர். இவ்வினங்களைப்பெறுவதில் விவசாயிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

அபிவிருத்தியடைந்துவரும் இப்பிரதேசத்தில் அதிகரித்து வரும் விவசாயிகளின் தொகையை நன்குணர்ந்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்று கள்ளச் சந்தையில் விதை நெல்லின் விலையை பெருமளவு உயர்த்தி வருவதுடன் தரம் குறைந்த விதை நெல்லையும் விவசாயிகளுக்கு விற்பனைசெய்து வருகின்றனர். இதனல் இன்று சிரமப்படுவதுடன் எதிர்காலத்திலும் சிரமத்தை ஏற்கக்கூடியநிலை விவசாயிகளுக்கு உருவாகியுள்ளது.

எனவே இவ்வகையான கஷ்டங்களிலிருந்து இப்பிரதேசத்தில் வாழும் விவசாயிகளை விடுவிப்பதற்கு விவசாயக்கந்தோர் மூலம் தேவையான அளவு விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு, உரிய உயரதிகாரிகள் ஆவன செய்யுமாறு விவசாயிகள் சார்பாக கோரிக்கை விடுக்கின்ருேம்.

எஸ். ஜோன்பப்ரிஸ்
பொதுச்செயலாளர்
இயூஜின் சன சமூக நிலையம்.
கிளிநொச்சி.

ஃ ஃ ஃ

## நீதி வழுவா நெறிமுறை

23-10-80 வியாழன் ஈழநாடு இதழில் நமது நோக்கு பகுதியில் வெளிவந்த பாராளுமன்ற இறைமை என்ற பகுதியை வாசித்தேன். அதில் அடங்கியிருந்த கருத்துக்கள், ஆற்றல் மிக்க அறிவுரைகள், என் மனதை கவர்ந்துள்ளன. என்னை மட்டுமல்ல ஈழத்திருநாட்டில் உள்ள, மக்கள் உள்ளங்களில், நீதியான உள்ளங்களில் ... வெளியிட்டு தமிழ்மக்களின் பாரம்பரியமான நீதி வழுவா நெறிமுறையை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளமைக்கு ஈழநாடு என்றென்றைக்கும் பாராட்டப்பட வேண்டியது.

மிகக்குறைந்த மூலதனத்தில் ஈழநாடு நிறுவனம் நடைபெற்ருலும் - இலங்கையில் உள்ள ஏனைய தினசரிகளின் விற்பனை விலையிலும் பாதி விலையில் விலைப்பட்டாலும் - மக்கள் சார்பான - ஜனநாயகக் கருத்துக்களை வெளியிட்டு வருவது - பத்திரிகைத் தருமத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை அனைவரும் உணர்வார்களாக.

வாழ்க ஈழநாடு வளர்க ஈழ ...

நா. சே. திலிங்கம்
வேட்பன் ஒழுங்கை,
உரும்பிராய்.

# புனிதயூதாததேயு

## ஆலய ஐப்பசித் திருவிழா



புனித யூதா ததேயு ஆலய ஐப்பசித் திருநாள் ஆரம்பமாகி 27-ந் திகதி திங்கள் மாலை கூட்டுத் திருப்பலிப் பூசையும் வேஸ்பரும் 28-ந் திகதி காலை திருநாள் கூட்டுப்பலியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் அருளப்படும். இவ்வாராதனைகளில் பங்குபற்றப் பல பாகங்களிலும் இருந்து புனிதரின் அருள்பெறப் பக்தர்கள் கூடுவது இப்பகுதியில் சிறப்பு நாளாகும்.

இப்புனிதரின் திருத்தலம் இலங்கையில் மட்டுநகரில் உள்ள தேத்தாத்தீவிலும் அரியாலையிலும் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையிலும் சித்திரைக் கடைசி ஞாயிற்றுக் கிழமையிலும் அவரது திலங்களாக அநுசரித்து பக்தர்கள் வருகைதருவதும் புனிதரின் வேண்டுதலால் அருள்பெறறு பல புதுமைகள்மூலம் பல பாகங்களிலும் பக்தர்கள் தொகை பல்கிப் பெருகுவதைக் காணலாம்.

**செ. யோசேப்பாலா**

புனிதரின் சிந்தனைகளையும் பெருமைகளையும்பற்றிக் கூறுவதானல் திருச்சபையால் இப்புனிதரை ''கைவிடப்பட்டவரின் பாதுகாவலர்'' எனவும், யேசுக்கிறிஸ்துவின் கடைசி இராப்போசனத்தில் கலந்து கொண்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் அவரது நெருங்கிய உறவினராகவும் உள்ளார் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

புனித யூதா ததேயு என்னும் பெயருக்கு அர்த்தம் அன்பு நிறைந்தவர், தயாள சிந்தை உள்ளவர் என்பதாகும். இப்புனிதரின் தொண்டு யூதேயா, சமேரியா, இதுமியா, சீரியா, மொசப்பத்தேமியா போன்ற தேசங்களிலும் காட்டுமிராண்டிகளாகச் சிவித்த அத்தேச மக்களைச் சீர்திருத்தமுள்ள மக்களாகச் சிவிக்கக் கற்பித்தார். இதனல் மூடக் கொள்கை கொண்ட கயவர்கள் இவரது பணிக்குப் பலவிதத்தில் இன்னல் கொடுத்து ஈற்றில் பாரிய தண்டத்தாற் சிரசைத் தாக்கியும் அவரது இறைபணியின் தாய்மையால் பல புதுமைகள் புரிந்து புனிதராகப் பக்தர்களுக்கு இறைபாலித்து வருகின்ருர்.

இப்புனிதரின் தினத்தை நினைவுகூரப் இந்நாளில் அவரது சிந்தனைகளையும் திருமறை உணர்வையும் எற்டுத்தஅவர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழில் அபிவிருத்திக்கு

# 13 கோடி ரூபா செலவில் ஐம்பது திட்டங்கள்!

## 2 ஆயிரம் பேருக்கு வேலைகிடைக்கலாம்

(கொழும்பு)
13 கோடி ரூபா செலவில் 50 கடற்றொழில் அபிவிருத்தித்திட்டங்களுக்குக் கடற்றொழில் அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது.

நாடுபூராவும் மேற்கொள்ளப்படும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகள், வள்ளம்-வள்ள உதிரிப்பாகத் தொழிற்சாலைகள், மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலைகள் ஆகியன இத்திட்டத்தின்கீழ் நாடுமுழுவதும் அமைக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் மாசிக் கருவாடும் உற்பத்தி செய்யப்படும். (இ)

யாழ். பெரிய குளஅபிவிருத்தி

# மகாவலி அமைச்சு நிதிஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)
யாழ். பெரியகுளத்தை அபிவிருத்திசெய்வதற்கு காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இக்குளம் அபிவிருத்தி செய்யப்பட்டதும் பெரும் போகத்தின்போது 3 ஆயிரம் நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாம்.

இத்துடன் இரணைமடுக் குளத்திலிருந்து மேலும் அதிகமன பிரதேசத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேசமயம் கல்மடு, கனகாம்பிகைக்குளங்களும் புனரமைப்புச்செய்யப்பட்டு 35 ஆயிரம் ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ)

மட்டுவில் கொலைவழக்கு:

## "கணவனை வெட்டிப்போட்டிருப்பதாக எதிரிகள் என்னிடம் கூறினர்"

### இறந்தவர் மனைவி சாட்சியம்

(மட்டுவில்)
"எனக்கு மருந்து வாங்கி வருவதாகக் கூறி காலையில்காவகச்சேரிக்குச் சென்ற எனது கணவர் நீண்ட நேரமாகியும் திரும்பவில்லை. நான் என் கணவர் வரவை எதிர்பார்த்து வீதியில் நின்றேன். அப்பொழுது சைக்கிளில் வந்து கொண்டிருந்த முதலாம் எதிரியும், இரண்டாம் எதிரியும் என்கணவரை வெட்டிப் போட்டிருப்பதாகக் கூறினர்.

இவ்வாறு மட்டுவில் வடக்கு கொலைவழக்கில் இறந்தவரின் மனைவியான திருமதி பொன்னம்மா இராமலிங்கம் மட்... யத்தின்போது கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஸி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1980 ஜனவரி 5ம் தேதி மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இராமநாதி பாலசுப்பிரமணியம் வீ. இளையதம்பி ஆகியோர் சதாசிவம் இராமலிங்கத்தை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி திருமதி அ. நிமலினியின் அனுசரணையுடன் ஆஜரானார்.

திருமதி பொன்னம்மா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: முதலாம் எதிரியின் அண்ணன் எமது மருமகன் அண்மையில் எனது கணவருக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட கைகலப்பின்போது மருமகன் இறந்தார். தனது அண்ணனை கொன்றதாகக் கருதிய முதலாம் எதிரி பழிக்குப் பழி வாங்கும் முயற்சியிலே இக்கொலையை செய்துள்ளார்.

நான் பார்க்கும்போது முதலாம் எதிரி சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும்போது 2ம் எதிரி பின்னுக்கு இருந்தார். சைக்கில் ஹாண்டிலில் இரத்தக்கறை படிந்த ஏதோ ஒரு ஆயுதம் பை ஒன்றில் போடப்பட்டிருந்ததையும் என்னால் அவதானிக்க முடிந்தது.

நீதிபதி ஸ்தலத்திற்குச் சென்று நடத்திய மரண விசாரணையின்போது நான் சென்று இறந்தவரின் உடலை அடையாளம் காட்டினேன்.

நீதிபதி நவம்பர் 26ம் திகதி வரை வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். ( )

## கான்ஸ்டபிளைக் கண்டதும் ஓட்டம் பிடித்தாராம்

### திருட்டுச்சம்பவத்தில் சந்தேகநபர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், கடமை முடித்து வீடு செல்ல நின்ற கான்ஸ்டபிள் ஒருவர் அந்த சந்தேகத்துடன் நடமாடிய ஒருவரை துரத்திச் சென்று கைது செய்தார்.

அவரை விசாரணைக்குட்படுத்தியபோது சந்தேக நபர் திருட்டுச் சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசாரால் தேடப்பட்டு வந்தது தெரிய வந்தது.

அச்சுவேலியைச் சேர்ந்த பகிரதன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

யாழ், அரசினர் ஆஸ்பத்திரி பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வி. கிருபாகரன் என்பவர் கடந்த சில தினங்களுக்கு முன் யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நின்றார். கடமை முடிந்து வீடு செல்வதற்காக யாழ். பஸ் நிலையத்திற்கு வந்திருந்த கான்ஸ்டபிள் பஸ் நிலையத்தில் சந்தேக நபரைக் கண்டதும் அவர் மீது சந்தேகம் கொண்டு அவரைக் கைதுசெய்ய முயன்றபோது சந்தேக நபர் கான்ஸ்டபிளிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக ஓட்டம் பிடித்தாராம்.

கான்ஸ்டபிளும் விடாது சந்தேக நபரைத் தொடர்ந்து ஓடிச்சென்று அவரைக் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று விசாரணைக்குட்படுத்தினர்.

விசாரணையின் போது சந்தேக நபர் அச்சுவேலியைச் சேர்ந்தவரென்றும் அங்கு வசிக்கும் அவரது மைத்துனியின் வீட்டிலிருந்து சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பென்ரன் சங்கிலி ஒன்றைத் திருடிச் சென்று யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையொன்றில் பென்ரனை 282 ரூபாவிற்கு விற்றதும் சங்கிலியை அக்கரைப்பற்றில் உள்ள கூட்டுறவு வங்கி ஒன்றில் 450 ரூபாவுக்கு அடைவு வைத்ததும் தெரிய வந்தது.

விசாரணையின் பின் சந்தேக நபர் காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேக நபரால் விற்கப்பட்ட பென்ரனை நகைக் கடையிலிருந்து மீட்டதுடன், சந்தேக நபரை றிமாண்டில் வைத்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (கொ)

## இவர்கள் நிலை பரிதாபம்

(மன்னார்)
ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 500 ரூபா பணத்தைச் சில குடும்பங்கள் எடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விபரமறியாத சில குடும்பங்கள் 500 ரூபா பெர்மிட்டுக்களைப்பெற்று தலைமன்னாருக்கு வருகின்றனர். இப்பெர்மிட்டுகள் 3மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இதனால் இறுதிநேரத்தில் தாயகம் செல்லமுடியாத நிலையில் இப்பர்மிட்டுகள் காலாவதியாகின்றன. இப்பர்மிட்டுக்கள் ஒருவருடத்திற்குச் செல்லுபடியாக்கினால் இக்குடும்பங்களின் பிரச்னையைத் தீர்க்கலாம் என தலைமன்னாரிலுள்ள தொழிலதிகாரி திரு ஜோன் சர்க்கரியாஸ் தெரிவித்தார். (அ)

## "தமிழ்மக்கள் கலையால் உலகை ஆண்டவர்கள்"

(புலோலி)
"தமிழ் மக்கள் கலையைத் தெய்வமாகக் கொண்டு, கலையால் உலகை ஆண்டார்கள். தமிழ் மக்களின் கலை, கலாச்சாரப் பாரம்பரியங்கள் உலக மக்களாலேயே புகழப்பட்டு வருவது தமிழ் மக்களுக்கு பெருமையையளித்து வருகின்றது".

இவ்வாறு பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக் கழகத்தின் ஆறுவது ஆண்டு நிறைவுவிழாவிலும் விளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ் மகேசன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு திரு. கே. நடராசா தலைமை வகித்தார்.

திரு. மகேசன் தொடர்ந்து பேசுகையில்:

"நாம்வாழ்க்கையில் வெற்றியடையவேண்டுமாயின் நிச்சயம் போட்டிகள் இருக்கவேண்டும். ஆனால் அப்போட்டிகள் ஒருபோதும் பொறாமையாக மாறிவிடக்கூடாது. போட்டி பொறாமையாக மாறுமாயின் அது அது அழிவுக்குவழிவகுத்துவிடும். விளையாட்டுகள் மனித வாழ்க்கையை வளம்படுத்தி மேம்படுத்தவேண்டுமே தவிர, வாழ்க்கையை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லக் கூடாது" என்றார்.

பரிசில்களை திருமதி ஆனந்த மகேஸ்வரி மகேசன் வழங்கினார். (கு)

"வவனியாவிலுள்ள நிலம்

## அங்குவாழும் தமிழ்--சிங்கள முஸ்லிம் மக்களுக்குவழங்கப்படும்"

### வவனியா மாவட்டஅமைச்சர் உரை

(புளியங்குளம்)
"வவுனியா மாவட்டத்திலுள்ள நிலம், இப்பகுதியில் வசிக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கும் மாத்திரமே வழங்கப்படும்".

வவுனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்கஅதிபர் திரு, எஸ். பாலசுந்தரம் தலைமையில் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட காணிகளுக்கு உறுதி வழங்கும் வைபவத்தில் வவுனியா மாவட்ட அமைச்சர் திரு. டீ. மகிந்தசோம குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "1970ம் ஆண்டிலிருந்து இற்றைவரை இப்பகுதி மக்களினால் அடாத்த கவெட்டப்பட்ட காணிகளுக்கு ஒரு பரிகாரம்செய்யும் நோக்கமாக அன்றைய அரசு காணிகளை வெட்டியவர்களுக்கு இரண்டு ஏக்கர்களை வழங்கி ஏனையவற்றை அவர்களது உறவினர்களுக்கும் காணிகளற்றவர்களுக்கும் வழங்கிவருகிறது.

அரசு நகர் புறத்திலுள்ள காணிகளுக்கு ஏக்கருக்கு 1800ரூபாவும், கிராமப்புறத்திலுள்ள காணிகளுக்கு 600ரூபாவும் பெறுமதியென பதிப்பிட்டுள்ளது. ஆனால் இதற்கு தற்போது காணியின் பெறுமதியில் 6சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டு உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுகிறது.

இன்று காலை ஓமந்தைப்பகுதியிலுள்ள சுமார் 300பேருக்கு ஓமந்தை கிராமசபை அலுவலகத்தில் வைத்து உறுதிப்பத்திரங்களை வழங்கினேன். அதனையடுத்து கனகராயன்குளம் பகுதியிலுள்ள சுமார் 200பேருக்கு 450 ஏக்கர் நிலத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது".

இங்குள்ள நிலம் இப்பகுதியில் வாழ்ப்பவர்களுக்கேபகிர்ந்தளிக்கப்படும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது. இத்துடன் 1933ம் ஆண்டுக்கு முன்னர் வீதிகள் விஸ்தரிப்பு, குளங்கள் புனரமைப்பு, பாடசாலைத் தேவைகள் என்பவற்றை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் உதவியுடன் திருப்திகரமாகச் செய்து இப்பகுதியை அபிவிருத்தியடையச்செய்வேன்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. ஏ. முதனாயக்கா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. பி. சிறிசேன ஆகியோரும் கனகராயன்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. அ. விநாயகமூர்த்தி ஆகியோரும் பேசினார்கள். (க)

## கடன் சபை விண்ணப்பங்கள்

(புளியங்குளம்)
"உப - தபாலதிபர்களின் கடன் சபையின் விண்ணப்பங்களுக்கு சிற்றூழியர்கள் பிணைப் பொறுப்பளிக்கும் முறையை மாற்றியமைத்து உப-தபாலதிபர்களுக்கு அவர்களின் தரத்தில் இருப்பவர்களே உறுதியளிக்கும் வண்ணம் வகை செய்யவேண்டும்" என்ற தீர்மானம் அண்மையில் வவுனியா மாவட்ட உப-தபாலதிபர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது ஏகமனதாக நிறைவேறியது. இவ்வைபவத்திற்கு வவுனியா மாவட்ட தபால் தந்தி நுண் ஆய்வுப் பரிசோதகர் திரு. எஸ். சிவலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- மா. தேவராசா, செயலாளர்:- சி. குணரத்தினம், பொருளாளர்:- திருமதி ...கசாமி. மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## புங்குடுதீவில் தொழுநோய் ஆய்வு

(புங்குடுதீவு)
'இளைஞர்கள் தொண்டு மனப்பான்மையுடன் ஒற்றுமையாகச் சேவைசெய்தால் கிராமங்கள் எழுச்சி அடையும்.'

இவ்வாறு புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூகநிலையத்தில் நிலைய இளைஞர்களின் ஒத்துழைப்போடு நடாத்தப்பட்ட தொழுநோய் ஆய்வை ஆரம்பித்துவைத்துப் பேசிய புங்குடுதீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதம் கூறினார்,

அவர் தொடர்ந்து பேசுகையில், 'இவ்விளைஞர்களைப் போன்று சகல மக்களும் எம்மோடு ஒத்துழைத்தால் உடல் நலமுள்ள ஒரு புதுச்சமுதாயத்தை உருவாக்கமுடியும்' எனக் கூறினார்.

இவ்வாய்வில்யாழ். மாவட்ட தொழுநோய்க்குப் பொறுப்பாக இருக்கும் திரு. விஜயரத்தினமும் கலந்துகொண்டார், (கு)

## க்ரோறியாவக்கு தொலைபேசி

]சுழிபுரம்]
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு புதிய தொலைபேசி இணைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தன்னியக்கசேவையுடன் இணைக்கப்பட்டுள்ள இச்சேவை இம்மாதம்முதல் செயல்பட்டு வருகின்றது. (கு)

## புனித...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
...யரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தின் வளர்ச்சி கண்டு மென்மேலும் இறைபக்திபர... ...போரும். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லையேல் பயன்ஏற்படாது"

## சுகாதார விழாவில் முதல்வர்

(யாழ்ப்பாண )

சுகாதார சேவைகளில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களும்; ஊழியர்களும் சிறப்பாகப் பணிபுரிந்தாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லையேல் பயன் அதிகம் ஏற்படாது'.

'சுகாதார்விழா'வை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ். நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்நகர மண்டபத்தில் நேற்றுக்காலை கொடியேற்றி வைத்துப்பேசிய முதல்வர் இராஜா விசுவநாதன் மேலும் கூறியதாவது;

சபையின் நிர்வாகத்தில் சுகாதாரப்பகுதி ஒரு கரமாக இருந்தால் மராமத்துப்பகுதி மற்றொரு கரமாகும். அட்படியே மின்சாரப் பகுதியும் ஏனைய பகுதிகளும் ஒரே உடலின் பல்வேறு உறுப்புகள்தாம்.

ஆகவேதான், இச்சுகாதார விழா ஒழுங்குகளில் மராமத்துப் பகுதிக்கும் மின்சாரப் பகுதிக்கும் சபையின் பிற ஏனைய பகுதிகளுக்கும் பங்கு இல்லாமல் இல்லை.

மழைகாலத்தில் நகரம் சேறும் சகதியுமாக இருக்கக்கூடிய காலகட்டத்தில் தெருவீதிகளில் குண்டுகுழிகள் தலைகாட்டியுள்ள நேரத்தில் நுளம்பின் தொல்லை அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் 'சுகாதாரவிழாக் கொண்டாட' வேண்டுமா? என்ற கேழ்வியும் எழாது இல்லை.

'நோயாளிக்குத்தான் வைத்தியன் தேவையே அல்லாது சுகதேகிக்கு அல்ல!'' என்பதே அவர்களுக்கு யான் கூறும் பதிலாகும். சுகாதார சேவைகளைப்பற்றிய குறைபாடுகளை நாம் உணர்ந்துகொண்டால் தான் அவற்றில்இருந்து நாம் மீட்சிபெறலாம்: மீட்சிக்கான வழிவகைகளைத் தேடிக்கொள்ளலாம்,

சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் வருடம் பூராவும் சுகாதரர சேவைக்கான பதவிகளில் ஈடுபட்டிருந்தாலும் அந்தப் பணிகளால் நன்மை விளைந்துள்ளதா? இன்னும் நீக்கப்பட வேண்டிய குறைபர்டுகள் யாவை என்பதை எடைபோடுவதற்கு உரியகாலத்தைத்தவற விட்டால் 'சுகாதார விழாக்கள்' கொண்டாடப்படுவதில் அர்த்தம் இராது.

அங்ஙனம்கருதி இவ்விழாவை ஒழுங்குசெய்யவும் இல்லை. ஆயின் மேற்கொள்ளப் பாதிப்புகள் மிகுதிப்பட்ட நேரத்தில் தான் அவற்றின் தாக்கத்தை நாம் நன்கு உணரமுடியும்; ஏனையோருக்கும் நன்கு உணர்த்தமுடியும்.

சுகாதார சேவைகளில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் சிறப்பாகப் பணிபுரிந்தாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லையேல் பயன் அதிகம் ஏற்படாது.

எனவேதான் இருசாராரும் பொதுச்சுகாதாரத்தின் அவசியத்தை வற்புறுத்தலின் பேரின்றிச் சுயமாகத் தாமே உணர்ந்துகொள்ளக்கூடிய ஓர் காலத்தைத் தேர்ந்தெடுத்து சுகாதாரவிழாவைக் கொண்டாடுவதற்கு நீங்கள் துணிந்ததைப் பாராட்ட அவாவுகின்றேன். இது ஒரு ஸிசப்பரீட்சையாக இருக்கலாம். ஆயின் அதில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துகிறேன். (கொ)

---

## வீடமைப்புத்திட்டம் பூர்த்தி

(வவுணதீவு)

அரசாங்கத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவையொட்டி கட்டிட நிர்மாண அமைச்சினுல் தொகுதிவாரியாக நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு-வவுணதீவு (20) வீட்டுத்திட்டம் விரைவில் பூர்த்தியாகவுள்ளது.

மேற்படி வீடுகளுக்குரிய குடியிருப்பாளர்களை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் அண்மையில் தெரிவுசெய்திருந்தார். இம்மாத இறுதியில் வீடுகள் அனைத்தும் பூர்த்தியாகும். (க)

---

வடமாகாண

## சாரணர் இயக்க பாசறைவிழா

(அரியாலை)

வடமாகாண சாரண இயக்கங்களின் வருடாந்த பாசறை நிகழ்ச்சிகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது. இப்பாசறையில் 25 சாரணகுழுக்கள் கலந்துகொண்டன. மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இவ்விழாவில் சாரணகுழுக்களுக்கான வருடாந்தவிருதை யாழ் இந்துக்கல்லூரி சுவீகரித்துக்கொண்டது.

சாரணகுழுச்களின் சகல நிகழ்ச்சிகளிலும் முறையே யாழ். இந்துக்கல்லூரி, வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி கூற்சாரணர்குழு1-ம், 2ம்,3ம், 4ம், 5ம் இடங்களைப்பெற்றன.

---

# தமிழ் இனத்திற்கு எதையும் தாங்கும் இதயமுள்ள இளைஞர்தேவை

## கூட்டணித் தலைவர் கூறுகிறார்

(நெல்லியடி)

தமிழ் பேசும் இனத்திற்கு எதையும் தாங்கும். இதயம் கொண்ட வீர இளைஞர் அத்தியாவசியமாகும். விளையாட்டுப் போட்டிகள் மூலம் வெற்றியினையும் தோல்வியையும் சகிக்கக்கூடிய உள்ளத் தன்மையினையும் எதையும் தாங்கும் இதயத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும்,

இவ்வாறு நல்லூர் எம். பியும் கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் பருத்தித்துறை ஐ. விளையாட்டுக் கழகமும் நெப்போலியன் விளையாட்டுக்கழகமும் ஒன்றிணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்திருந்தார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ம மேலும் மயிலும் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது;

விளையாட்டு மைதானத்தில் பெறுகின்ற பயிற்சி தான் யுத்தகளத்திலும் பயன்படுகின்றது விளையாட்டு மைதானத்தில் தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பது போல அரசியல் துறையிலும் நடக்க வேண்டும் தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடந்தால் தான் பின்பு உரிய நேரத்தில் தலைவனைத் தட்டிக் கேட்கவும் முடியுப் இதனை நமது இளைஞர்கள் நன்கறிவார்கள்.

ஏழை - பணக்காரன், சமூ என்ற ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான சூழ்நிலை விளையாட்டுக்கள் மூலம் நிலைநிறுத்தப்படுகின்றன. சமத்துவமான சூழ்நிலையினைத் தோற்றுவிக்கும் இவ்வாறான விழாக்கள் நம் மத்தியில் சமூக, பொருளாதார அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும்,

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வியைக் கருத்திற்கொண்டு செயற்படக்கூடாது, நமது கடமையினை ஒழுங்காக - நிதப்கிரமான முறையில் செய்தல் வேண்டும் என்ற உயர்ந்த மனப்பான்மையுடன் செயலாற்றல் வேண்டும்.

இப்போட்டியில் அதிக பாரமுள்ள வாகனம் ஒன்றை கழுத்தினால் நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை வரை இழுத்துச் சென்று சாதனைபுரிந்த திரு. ஆ. புவனேந்திரனையும் திரு. சிவசிதம்பரம் பாராட்டினர். (இ)

---

# 1000 சுருட்டுகளுக்கு 10 ரூபா சம்பள உயர்வு

## வடமாநில தயாரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

நவம்பர் மாதம் முதல் ஆயிரம் சுருட்டுக்கும் மேலதிகமாக 10 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி சங்கக் கூட்டம் கோண்டாவிலில் வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கத் தலைவரும், யாழ் மாநகரசபை உறுப்பினருமான திரு. செ. குமாரவேலு தலைமையில நடைபெற்ற போதே இத்தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. குமாரவேலுவே இத்தீர்மானத்தைக் கூட்டத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது. இன்று வாழ்க்கைச் செலவு விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. சுருட்டுத் தொழிலாளர்கள் இன்று கிடைக்கும் கூலியில் தாங்கள் வாழ்க்கையை நடத்த முடியாது கஷ்டப்படுகிறார்கள். புகையிலையின் விலையும் மிகக்கூடுதலாக அதிகரித்து வருகிறது. அதே வேளை சுருட்டைப் பாவிக்கும் மக்கள் தொகையும் மிகவும் அருகி வருகிறது. அதனால் தென் பகுதியில் சுருட்டு அதிகம் விற்கமுடியாது இருக்கிறது. இத்த நிலையில் சுருட்டுத் தொழிலாளர்களும்" தயாரிப்பாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். எப்படி இருந்தபோதும் நவம்பர் மாதம் 11-ம் திகதி முதல் தொழிலாளர்களுக்கு எத்தாவழியான ஆயிரம் சுருட்டுக்கும் 10 ரூபா கூலி அதிகமாக வழங்க சகல சுருட்டுத் தயாரிப்பாளர்களும் முன்வர வேண்டும். அப்போது சுருட்டுத் தொழிலாளர்களை ஓரளவு வறுமையிலிருந்து காப்பாற்ற முடியும்.

வேறு எந்தக் கைத்தொழில்களுக்குமில்லாதவாறு அரசு சுருட்டுஉற்பத்தியாளர்களுக்கு வரிவிதித்துள்ளது. ஒரு லட்சம் ரூபாவுக்கு 15 வீதம் உற்பத்தி வரியை எம்மிடமிருந்து அரசு அறவாக்குகிறது. அதை கட்டுவது எம்மால் முடியாதிருக்கிறது. எனவே அரசு இரண்டுலட்சம் ரூபாவுக்கு மேல்தான் உற்பத்திவரியை எம்மிடம் இருந்து அறவிட வேண்டும். இதற்குத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றுகூடி தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வெகு விரைவில் தமிழ் மக்களின் பாரம்பரிய மிக்க இத்தொழில் அழிந்துவிடும். (கொ)

---

## 8 பாடங்களிலும் அதிதிறமைச்சித்தி

(மட்டுவில்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனுன செல்வன் டி. ரஞ்ஜித், கடந்த ஜீ. ஸி. ஈ. சாதாரண பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்று தென்மராட்சிப் பகுதியிலேயே சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

இவர் கடந்த 1979-ம் ஆண்டு ஜீ. ஸி. ஈ. பரீட்சையில் தோற்றிஞர். இவர் 7 பாடங்களில் அதி திறமைச் சித்தியும் பெற்றதாக வெளிவந்த இவரின் பெறுபேறு தெரிவித்தது. உடனடியாக இவர் பணம் செலுத்தி தனது பெறுபேற்றை மீளாய்வு செய்யும்படி, கல்வி இலாகாவைக் கோரினர்.

கல்வி இலாகாவின் மீளாய்வைத் தொடர்ந்து, இவர் எட்டுப் பாடங்களிலும் அதி திறமைச் சித்தி எய்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## குடும்பநலத் திட்டப்பிரிவு

(வவுணதீவு)

கன்னன்குடா கிராமசபைப் பிரதேசத்தில் குடும்பநலத்திட்டப் பிரிவொன்றை ஆரம்பிக்குமாறு கன்னன்குடா சுகாதார சேவை இயக்கத் தலைவர் திரு. மா. நடேசன் மட்டக்களப்பு மாவட்ட சுக சேவை அத்தியட்சகரை மகஜர் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

இப்பகுதித் தாய்மார்கள் மட்டக்களப்புப் பெரியாஸ்பத்திரிக்குச் சென்று குடும்பல சிகிச்சைகளைபெறுவதில் நீண்டகாலமாக அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளார்கள் (க)

---

## பிரயாணிகள் பாதிப்பு

(வவுணதீவு)

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மண்முனைத்துறையில் கடவைக் கட்டணங்களைக் கொந்தராத்துக்காரர்கள் திடீரென உயர்த்தியுள்ளார்கள். இதனுல் அப்பகுதிப் பிரயாணிகள் பாதிப்பு அடைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார் செய்துள்ளார்கள். (க)

## அங்கீகாரம் பெறவேண்டும்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபைப் பிரதேசம் வீடமைப்பு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 286ன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனுல் சுழிபுரம் கிராம சபைப் பகுதியில் மட்டிடம் கட்டுவதற்கு அல்லது திருத்துவதற்கு முன்னர் கட்டிட நிர்மாணத்திற்கான மாதிரிவரைபடங்கள் கிராம சபைக்கு அனுப்பி அங்கீகாரம் பெற வேண்டும். இதனை மீறுவோர் தண்டனைக்குள்ளாவார்கள்என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

---

வடபகுதி உள்ளூராட்சி

# மன்றங்களுக்கு சிங்களக்கடிதங்கள்

(சுழிபுரம்)

வடபகுதி கிராம சபைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், பரீட்சைத் திணைக்களம், ஆயுர்வேதமருந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த கடிதம் யாவும் தனிச் சிங்கள மொழியிலே மட்டும் அனுப்பப்பட்டுள்ளது.

சென்ற வாரம் சுழிபுரம் கிராம சபை அலுவலகத்திற்கு மேற்படி மூன்று அலுவலகத்திலிருந்தும் கிடைத்த கடிதங்கள் யாவும் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே கிடைத்துள்ளன.

இதனுல் அங்கு கடமை புரியும் ஊழியர்கள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சென்ற காலங்களிலும் பார்க்க தற்போது கிடைத்து வரும் கடிதங்களில் சிங்கள மொழியில் [illegible] தாக கிராம சபை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

இலங் [illegible] அதிபர்கள் சங்கத்தின் 7-வது ஆண்டுப் [illegible] கூட்ட[illegible] 2-ம் திகதி [illegible] மண்டபத்தில் நடை[illegible] சங்கத் [illegible] திரு. எ. [illegible] தலைமையில் [illegible] இக் [illegible] தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30
**புகுந்த வீடு**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30 a. m 4-45, 7-15, & 9-45 p. m.
**MISSION IN KABUL**
(Action Color)

**சாந்தி**
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
**நீயா?**
'வெள்ளிவிழா'' வண்ணச்சித்திரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Gregory Peck
in
**THE OMEN**
(Scope Color)
Adults only
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
எதிர்பாருங்கள்
**ஒரேவானம் ஒரேபூமி**

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
**ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்**
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-15, 7-15, 9-30
**THE GAUNTLET**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சௌகார்ஜானகி
**மகாகவி காளிதாஸ்**

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீபிரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி — சாவித்திரி
**குறவஞ்சி**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ் அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின் டீன்குமார், K. S. பாலச்சந்திரன், பரீனலே, விஜயராஜா நடித்த
**'அவள் ஒரு ஜீவநதி'**
சிறந்த தமிழ் திரைக் காவியம்.

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
**வெற்றி முரசு கொட்டும் 4-வது வாரமாக**
அலை மோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும் கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை
எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் **M. G. R.** மற்றும்
லதா, நிர்மலா, V. K. ராமசாமி, P. S. வீரப்பா
நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
**மீனவ நண்பன்**
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(அரியாலை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ் பரியோவான் கல்லூரிக்கும் இடையே, யாழ்ப்பாணக் கல்லூரிமைதானத்தில் வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

முதலாம் பிரிவில் 3 : 1 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவில் 2 : 0 கோல்களால் பரியோவான் கல்லூரி வெற்றியீட்டியது. மூன்றும் பிரிவில் இரு கோஷ்டிகளும் தலா 1 : 1 கோல்களைப் போட்டுச் சமனாகிக் கொண்டன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

மூன்றும் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி 3 : 2 கோல்களால் வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவில் இரண்டு கோஷ்டிகளும் எதுவித கோலையும் போடாது சமனாகிக் கொண்டன. முதலாம் பிரிவில் இரண்டு கோஷ்டிகளும் தலா 1 : 1 கோல்களைப் போட்டு சமனாகிக் கொண்டன.

இளவாலை புனித கென்றியார் கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையே புனித கென்றியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் 4 : 0 கோல்களாலும், இரண்டாம் பிரிவில் 4 : 0 கோல்களாலும் புனித கென்றியார் கல்லூரி வெற்றி பெற்றது. மூன்றும் பிரிவில் இரு கோஷ்டிகளும் ஆரம்பம் முதல் இறுதி வரை மிக உக்கிரமாக விளையாடிய பொழுதிலும் இரு கோஷ்டிகளும் தலா 1 : 1 கோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்துக் கொண்டன. (ஈ)

## "சைவத்தமிழ் மரபை பேணியவர் தனபாலசிங்கன்"

— பரமாசாரியசுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

"சைவத்தமிழ் மரபைப் பேணியவர்களுள் தலைசிறந்தவர் முத்தமிழ் விரகர் திரு. தனபாலசிங்கன். திரு. தனபாலசிங்கன் தனது நூல்கள் வாயிலாக ஆதீனங்களுக்கு உதவிய வரேயன்றி அந்த ஆதீனத்திலும் உதவிபெற அவர் விரும்பியதில்லை. நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு நிறையப் புத்தகங்களை உதவினர். பணமும்உதவினார் அவரதுசிந்தனை தூய சிந்தனையாகவே இருந்தது.

முத்தமிழ் விரகர் திரு. செ. தனபாலசிங்கன் நினைவு விழாவிற் பேசிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது பிரார்த்தனை உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமிகோவிலில் நடைபெற்ற இவ்விழாவுக்குத் தலைமைவகித்த உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் "ஆழ்ந்தபடிப்பினுலும், எழுத்தினுலும், வாசெவிப் பேச்சு வர்ணனைகளாலும் எல்லாரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர் திரு. தனபாலசிங்கன். அவர் எவருக்கும் உதவிபுரியும் பண்பாளர். உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமி கோவிலின் மகோன்னத வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார்" என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் "நூல் பல கற்று முன்னுக்கு வந்த அறிஞர் தனபாலசிங்கன் சிறந்த முருகபக்தர். முருகன் புகழைப்பாடிய அவர், எவ்வித கஷ்டமுமின்றி சிவசிந்தனையுடனே இயற்கையெய்தியது அவரது பெருந்தவமே" என்றார்.

திரு. தனபாலசிங்கன் நினைவுக்குழு அமைப்பாளரும், கணக்காளருமான திரு மு. சிவராசா பேசுகையில், "தூய்மையான உள்ளம் படைத்த திரு. தனபாலசிங்கன் கால வெள்ளத்தில் அழிந்துபோகாத நூல்கள் பலவற்றை ஆக்கித் தந்தார்" என்றார்.

செல்விகள் சு. மகேந்திரன், ச. திருநாவுக்கரசு ஆகியோரின் பக்திரச இசை விருந்தும் இடம் பெற்றது. (அ)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 12-ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(28- 10 -1980)

மேடம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். சகோதர வழியால் சுகமும் உண்டு.

இடபம்: நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்துகொண்டிருக்கும். வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கும் இடமுண்டு. உசார்நிலை விரும்பத்தக்கது.

மிதுனம்: இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நன்று.

கடகம்; அமைதியுடன் காரியங்களுக்கு வழிகோலப்படலாம். வசீகரப் பேச்சு வெற்றியைத் தேடித்தரும். தொழிலும் விருத்தியுண்டு. கல்விகற்கும் மாணவர்களுக்கு இன்று பொன்னானநாள்

சிங்கம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத்தரும். தொழில் துறையில் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

கன்னி: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம். இனசன மகிழ்ச்சியும் உண்டு. தொழில் விருத்தியுடன் வாகன நலனும் உண்டு. தாய்வழியால் தனலாபமும் உண்டு.

துலாம்: நடுநிலை தவறாது நல்லதைச்செய்வீர்கள். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பும் உண்டு.

விருச்சிகம்: அரசினர் அத்திரப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அமைதியே நன்று. வைத்தியச் செலவிற்கும் இடமுண்டு.

தனுசு: தாம்பத்திய வாழ்வில் தனிச்சிறப்புக் காணப்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில் துறையிலும் சிறப்புண்டு. காதலர்களுக்கும் கனிவான நாள்.

மகரம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். விபத்திற்கும் இடமேற்படலாம் அவதானம் வேண்டும்.

கும்பம்: கல்வியில் சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள். எதிர்பாராத செலவிற்கும்இடமுண்டு. தந்தை வழியால் தனலாபமும் கிடைக்கும். பெரியோர் ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிட்டும்.

மீனம்: குடும்பத்தில்மகிழ்ச்சி நிலவும் உயர்பீட ஆதரவும் உரிமையும் கிடைக்கும், வாகன நலனுமுண்டு. கடையையில் உற்சாகம் பிறக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தொழில் நுட்ப நிறுவனம் வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்திற்கும், யாழ்பாணக் கல்லூரி முதலாவது பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தொழில் நுட்ப நிறுவனம் 3 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## "விளையாட்டுப் போட்டி வாழ்க்கைக்கு உதவும்"

(மண்டை தீவு)

"வாழ்க்கையில் ஏற்படக்கூடிய போராட்டங்களை அஞ்சாது திறந்த மனத்துடன் எதிர்நோக்கி நல்ல முறையில் தீர்த்துக் கொள்வதற்கு விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்கள் பயிற்சி பெறுவதுடன் மாணவர்கள் உடல் வலிமையையும் உற்சாகத்தையும் வெற்றி தோல்வியையும் சமமாக மதிக்கும் மனப்பாங்கையும் பெறுகின்றார்கள்."

இவ்வாறு மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தீவுப் பகுதி கல்வி அதிகாரி திரு. பொன் கணேசன் கூறினார்.

மற்றும் கல்வி அதிகாரி திரு. கே. தங்கராசா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. எஸ். சிவபரஞ்சோதி உட்பட பலர் உரையாற்றினார்கள். வித்தியாலய அதிபர் எஸ். சண்முகநாதன் நன்றியுரை கூறினார்.

இல்ல விளையாட்டுப்போட்டியில் பச்சை, நீலம், சிவப்பு இல்லங்கள் முறையே 1-ம், 2-ம், 3-ம் இடங்களைப் பெற்றன. (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# "எதற்கும் அஞ்சாமல்நம்மை ஐக்கியப்படுத்துவோம்"

## - வெகுஜன இயக்க பிரமுகர்

(உடுப்பிட்டி)

"எந்த விதமான அரசியல் நிர்வாக அமைப்பு முறைகள் வந்தபோதும், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற அந்தந்த இமைப்புகளு ச்குள்ளும் போராடியே வந்துள்ளனர். மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பு எமது மக்களுக்குப் பாதகமாக அமையுமென நாம் முடிவுக்குவரும் அதேவேளை நாம் அவைகளுக்கெல்லாம் அஞ்சாமல் எம்மை நாமே ஐக்கியந் படுத்தித் தயாராகிக் கொள்வோம்"

இவ்வாறுதீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்க இணைக்காரியதரிசி திரு கே. தங்கவடிவேல் உடுப்பிட்டி கொற்றுவத்தையில் நடைபெற்ற 'அக்டோபர்21' நினைவு தினப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தங்கவடிவேல் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'வேற்று இன அரசியல் வாதிகளோடு இணைந்துநின்று சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் எமது மக்களை ;ஒடுககுவதற்குப் பாவித்தவர்கள் இப்போது மாவட்ட அபிவிருத்தி சபைகள் மூலம் பக்கத்தேயிருந்துகொண்டு வேற்றுஇனத்தவர்களின் உதவியின்றித் தாங்களாகவே அரசியல் நிர்வாக இயந்திரங்களை எம் மக்கள் மேல் பாவிக்கும் வாய்ப்பைப் பெறப்போகின்றனர்.

"எமது மக்கள் ஸ்தாபன அடிப்படையில் ஒன்றுதிரண்டு துணிவோடிருக்கவேண்டும்",

திருவாளர்கள் கே. வையாபுரிநாதன், எஸ். ஜெகராசசிங்கம், கே. பவானந்தன் டாக்டர் எஸ். குணரத்தினம் ஆகியோருட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (கு)

# "சம்பளத்தை உயர்த்திஞல் •••••••••• போராட்டமென்ற பேச்சுக்கே இடமிராது"

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாள்ர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும். முன்பு இருந்த சம்பளத்துடன் வருங்காலத்தில் கூட்டப்படும் சம்பளத்தையும் சரியாகமுதலாளிகள் கொடுக்க முன்வருவார்களாஞல் போராட்டமென்பதற்கு இடமிராது

இவ்வாறு நல்லூரில் நடந்த அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் கூறிஞர்.

தொழிலாளர்களின் கஷ்டங்களை உணந்து காலதாமதமின்றி உற்பத்தியாளர்கள் சம்பளம் கூட்டிக் கொடுக்க முன்வராத காரணத்தாலேயே தொழிலாளர்கள் போர்க்கொடி உயர்த்த வேணடி ஏற்படுகிறது. என்றும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகளின் உயர்வுகளை தற்சமயம் தொழிலாளர்களால் சமாளிக்க முடியாது என்றும் இது விடயமாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு எமது சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற இருக்கிறது என்றும் அவர் கூறிஞர்.

முன் இருந்தபடி ஆயிரம் சுருட்டுக்கு 50/- ரூபா சம்பளத்துடன் கூடுதலாக ரூபா 12/50 கூட்ட வேண்டுமென எமது சங்கம் ஆலோசனை தெரிவித்தது. முன்னைய சம்பளம் 50/- ரூபா அரசாங்கத்தால் சட்டமாக்கப்பட்டு விட்டது என்றும் அவர் கூறிஞர். (கொ-கு)

## தேவை

கனரக வாகனம் செலுத்துவதற்கு லைசென்ஸ் பெற்ற டிரைவர் தேவை. 40—45 வயதிற்கு இடைப்பட்டவர் விரும்பத்தக்கது. லைசென்ஸ் மற்றும் பத்திரங்களுடன் நேரில் சந்திக்கவும். ரும்சன்ஸ் ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ், 19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7197

## பயிற்சி

ரேடியோ-டெலிவிசன், ஏயார்கொண்டிசனிங், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி- சனி, ஞாயிறு வகுப்புக்கள், சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் 31-10-80வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7190

## நாளை நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இரு உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியை எதிர்த்து காரைநகர் இந்துக் கல்லூரி விளையாடும். இரண்டாவது போட்டியில் உரும்பராய் இந்துக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி விளையாடும்.

கடந்த சில தினங்களாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றுவருகிறது,

## தங்கப்பதக்கம் பெற்ருர்

(துணுச்காய்)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சங்கீதப்போட்டியில் கர்நடக சங்கீத நிகழ்ச்சியில் யோகபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி தயாநிதி பரஞ்சோதி 3வது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை தட்டிக்கொண்டார்.

இப் போட்டிபுல் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இவர் ஒருவரே பங்குபற்றி இருந்தார். (கு)

## பொதுசன தொடர்பு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய பொதுசனதொடர்பு அதிகாரியாக திரு. ஏ. பி. சிறிநிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.ஏ.பி.சிறிநிவாசன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின்பழைய மாணவனும் சித்தங்கேணி காலஞ்சென்ற உள்ளூராட்சி ஆயுள் வேதவைத்தியர் திரு.ஆ.புண்ணியமூர்த்தியின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

## புதிய சித்திரத்தேர்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை பிட்டியப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய சித்திரத்தேர் உறைவிடத்திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. புதிய சித்திரத்தேர் புதிய உறைவிடத்தில் நிறுத்தும் வைபவம் நாளை பிற்பகல் நடைபறும்.

இத்திருப்பணி வேலைகளில் திரு. அ. க. வேலுப்பிள்ளை திரு. நா. பரமராசா ஆகியோர் முன்னின்று உழைத்தது குறிப்பிடத்தக்கது. புதிய உறைவிடத்துக்கான முக்கிய சமய கிரியைகள் நாளை நடைபெறும். (இ)

## புதிய பஸ்தரிப்பு நிலையம்

(புளியங்குளம்)


கனகராயன்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சபை; பொதுமக்களின் உபயோகத்திற்கென சுமார் மூவாயிரம் ரூபாசெலவில் புதியபஸ்தரிப்பு நிலையத்தை நிர்மாணித்துள்ளது. (க)

## நோயாளர் பெரும் அவதி

(துணுக்காய்)

மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் தமிழ் தெரியாத வைத்திய அதிகாரியால் இப்பகுதி நோயாளர்கள் பெரும் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இந்த ஆஸ்பத்திரியில் வெளிநாட்டைச் சேர்ந்த வைத்திய அதிகாரி கடமைபுரிந்துவருகிருர். அவருக்குத் தமிழ் தெரியாத நிலையில் இப்பகுதி விவசாய குடியேற்ற மக்கள் தமது நோயையும் தேவைகளையும் சரிவர கூறிச் சரியான வைத்திய வசதியைப் பெறமுடியாத பரிதாப நிலையில் உள்ளனர்.




# "பாகுபாடு காட்டாத சிறந்த அதிகாரி"

## பிரிவுபசார வைபவத்தில் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"ஊழியர்கள் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு கர்ட்டாமல், பாகுபாடு இல்லாமல் ஒரு சிறந்த அதிகாரியாக விளங்கிய திரு. ஜி. கே. கே. குலரத்னவின் இடமாற்றம் எமக்கு ஒரு வேதனையை அளித்தாலும், இளம்வயதினரான இவரது எதிர்காலம் வளமாக அமையவேண்டும் என்ற எண்ணத்திஞல், வேதனை பெரிதாக எமக்குத் தெரியவில்லை. தமிழில் ஒரு வார்த்தைகூடத் தெரியாமல் இங்கு வந்த இவர், மூன்று வருட காலத்துக்குள் தமிழைந் தெரிந்து சுத்தமான தமிழில் இன்று எம் மத்தியில் உரையாற்றவும் கற்றுக்கொண்டார். இவர் போன்ற உண்மையான நல்நோக்கம் கொண்ட சேவையாளர்களிஞல் நாட்டுக்கு சவாலாக விளங்கும் குறுகிய இனப்பாகுபாடும் மறைந்துவிடுகிறது"

இவ்வாறு குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் இயந்திர அதிகாரியாகக் கடமையாற்றி பாலாவி உப்பளத்துக்கு இடமாற்றம்பெற்ற திரு. ஜி. கே. கே. குலரத்னவுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரவைபவத்தில் குறிஞ்சாத்தீவு உற்பத்தி முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார். இவ் வைபவத்துக்கு திரு. மகாலிங்கம் தலைமைவகித்தார். பிரியாவிடைவைபவத்தில் 150க்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

திரு. குலரத்ன நன்றிதெரிவித்துப்பேசுகையில், குறிஞ்சாத்தீவில் தமிழ் ஊழியரும் தொழிலாளர்களும் தமக்கு அளித்த ஆதரவுஒத்துழைப்பை மறக்கமுடியாது என்றும், தமது எதிர்கால உயர்வுக்கு இங்கு ஏற்பட்ட நல்ல அனுபவம் ஏணியாக இருக்கும் என்றும் கூறிஞர்.

## 3மாதங்களாகியும் நியமனமில்லை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபைக்கு மூன்று மாதங்களாகியும் ஓர் விசேட ஆணையாளர் நியமிக்கப்படவில்லை. இதஞல் வரியிறுப்பாளர்கள் பெரும்தொல்லைகளை அனுபவிக்கவேண்டியுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர். (சு)

## பௌத்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யான மாற்றுந்தாய்ப் மனப்போக்குகளை ப்பிபுக்கிறது என்று அஞ்சவேண்டியுள்ளது.

ரசாங்கத்தின் இவ்விதமான நடவடிக்கைகளிஞல்தான் தமிழ்மக்கள் தங்களது தேவைகளைத் தாங்களே தீர்த்து வைக்கும் வழிமுறைகளை எதிர்பார்க்கின்ருர்கள் ப்படியான சூழ்நிலையை விநம்புகின்ருர்கள்!

கலாச்சார அமைச்சு ஒரு பிரிவு மக்களுக்காக மட்டும் இயங்கக்கூடாது. இந்த நாட்டில் பௌத்த மதமும், பௌத்த கலாச்சாரமும்தான் இருக்கிறது என்ற நினைப்பை கலாச்சார அமைச்சு மாற்ற வேண்டும்' என்று திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்த போது கலாச்சார அமைச்சர் திரு. ஹுருள்ளே—

'ஊழியர்களின்பற்றுக்குறையிஞல்தான் இவ்விதமான தவறுகள் ஏற்பட்டுவிட்டன. கிழக்குமாகாண கோவில்கள் திருத்தப்படுவது சம்பந்தமாக சிபார்சு விரைவில் ஜஞதிபதியின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்' என்று உறுதியளித்தார். (ம)

## வாஞெலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை வாஞெலி தமிழ்ச் சேவை ஒன்றில் இன்று இரவு 9-45மணிக்கு திருவரங்க நாயகி பாரதி எழுதிய "புலவன் தந்த நாமகள்" என்ற இசைச்சித்திரம் ஒலிபரப்பாகும்.

## பல்கலைக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு ஜி. டி. சமரவிக்கிரம, திரு வீரரத்ன திரு வனசுந்தரா ஆகியோர், மாணவனின் மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தனர். (ப)

## இளர்ச்சியில்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்கத் தடங்காதென்ருர்.

### மின்துண்டிப்பு பயமுறுத்தல்

மின்சார கட்டணப் பாக்கியை அறவிட்டால் தாங்கள் மின்சாரத்தைத் துண்டிக்கப் போவதாகவும் தமிழ்நாட்டின் இதர குதிகளுக்கும்மின்சாரம் கிடைக்காதவாறு செய்யப் போவதாகவும் திருச்சிக்கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் தீர்மானித்ததாகத் தெரிவித்த அமைச்சர், மின்னிணைப்பைத் துண்டிக்க மாநில மினசார சபையைத் தவிர வேறு ஏவருக்கும் அதிகாரம் கிடையாதென்றும் கூறிஞர்.

யாழ். பரடசாலைகளின்
உதைபந்தாட்டப் போட்டிகள்
புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில்
சுழிபுரம்விக்ரோறியாக்கல்லூரியில்
நடைபெறுகின்றன.
7221

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... 63-ம் இலக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QB 8948/78 The Eelanaadu P. 13. No Tegrame Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org